# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 28.12.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் உங்கள் முன்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் அறிவிப்புகளிலிருந்து அவர்கள் கண்ட ஆன்மீகக் கனவுகள், கஷ்ஃப் காட்சிகள் தொடர்பான அறிவிப்புகளை உங்கள் முன்னால் எடுத்து வைக்கிறேன்.

முதலாவது அறிவிப்பு ஹஸ்ரத் முஹம்மது ஃபாஸில் சாஹிப் உடையதாகும். அவர்கள் கூறுகின்றார்கள்: இது, இதற்கு முன்னர் அவர் கூறிய அறிவிப்புகளின் ஒரு தொடராகும். இவர் சிறிது காலத்திற்காக காதியான் வந்திருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நட்பில் இருந்தார். பிறகு இவர் கூறுகின்றார்: 5, 6 நாட்களுக்குப் பிறகு காதியானிலிருந்து விடைபெற்று வீட்டிற்குத் திரும்பி வந்து, எனது பகுதிகளில் நான் தப்லீக் செய்ய ஆரம்பித்தேன். முதலாவதாக எனது ஆசிரியரிடம் தப்லீகிற்காகச் சென்றேன். இரவில் அவருக்கும், அவரது ஊரைச் சேர்ந்த அவரது நண்பரான மியான் லாலுத்தீன் சாஹிப் அவர்களுக்கும் தப்லீக் செய்தேன். நான் தொழுது விட்டு தூங்கினேன். அன்று இரவு கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். இடுப்பில் ஒரு பெல்ட் கட்டப்பட்டிருந்தது. சுறுசுறுப்பாக வந்த அவர்கள் எனது வலது கையைப் பற்றிப் பிடித்தவாறு வேகமாக அழைத்துச் சென்றார்கள். இறுதியில் மதீனாவில் ஹஸ்ரத் ரஸுல் கரீம் (ஸல்) அவர்களது வீட்டிற்கு அருகில் என்னை கொண்டு சென்று நிற்க வைத்தார்கள். அங்கு வீடுகளுக்கு முன்னால் நான் நின்றேன். கனவில் இதற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தென்படவில்லை. அது பூசப்படாத வீடாக இருந்தது. அதில் 9 வீடுகள் இருந்தன. அவற்றைப் பார்த்தவாறு நான் கூறுகின்றேன். இவை ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களது மனைவிமார்களின் வீடுகளாகும் என்று கூறுகின்றேன். அதன் வடக்குப் பகுதியில் சுடப்படாத கற்களால் ஆன பள்ளிவாயில் இருந்தது. அதை மஸ்ஜித் நபவி என்று கூறுகின்றேன். அத்துடன் கண்கள் திறந்தன. எனது ஆசிரியருக்கும் இந்தக் கனவைக் கூறியவாறு, ஆயினே கமாலாத்தே இஸ்லாம் என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூலையும் கொடுத்து விட்டு அங்கிருந்து வந்து விட்டேன். 15 நாட்களுக்குப் பிறகு மவ்லவி சாஹிப் அந்த நூலைப் படித்து விட்டு காதியான் சென்றார். அங்கு சென்று பைஅத் செய்து திரும்பி வந்து விட்டார். இவ்வாறே மியான் லால் சாஹிபும் பைஅத் செய்து விட்டார்.

ஹஸ்ரத் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: (இவர் 1890 அல்லது 91-ல் பைஅத் செய்திருப்பார்.) நான் பைஅத் செய்வதற்கு பல வருடங்களுக்கு முன்பாகவே, அதாவது 1893 -ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்திருக்கிறேன். ஒருமுறை மஸ்ஜித் முபாரக்கில் அஸர் தொழுது விட்டு பழைய மாடிப்படிகளிலிருந்து கீழிறங்கி வந்தேன். மஸ்ஜித் முபாரக்கில் தொழுது விட்டு வராண்டாவில் வந்த போது, கண்ணியமிக்க இளைஞர் போன்று தோற்றமுடைய இருவரை சந்தித்தேன். வெண்ணிற ஆடை அணிந்திருந்தனர். அவர்கள் காதியான் வந்திருந்தனர். எங்களை நலம் விசாரித்து விட்டு மிர்ஸா சாஹிப் எங்கிருக்கிறார்? என்று தயவுசெய்து கூறுங்கள் என்று கேட்டனர். நாங்கள் மிகவும் தொலைவிலிருந்து வந்துள்ளோம் என்றும் கூறினர். வாருங்கள் நான் உங்களுக்கு கூறுகின்றேன் என்று கூறினேன். நீங்கள் எனது பின்னால் வாருங்கள். மேலே வந்து நாங்கள் யார் என்பதை தெரிந்து கொள்வோம் என்று கூறினர். அவர்கள் எனக்கு முன்னால் மாடிப்படி ஏறிச் சென்றனர். நான் பின்னால் சென்றேன். அங்கு சபை கூடியிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தலைப்பாகையை கீழே வைத்து விட்டு அங்கு அமர்ந்திருந்தார்கள். ஹுஸுரிடம் சென்றதுமே உங்களது பெயர் குலாம் அஹ்மதா என்று அங்கு சென்றதுமே அவர்களுள் ஒருவர் கேட்டார். அதற்கு அவர்கள் ஆமாம் என்றார்கள். பிறகு நீங்கள் மஸீஹ் மவ்வூது என்று வாதம் செய்துள்ளீர்களா என்றும் கேட்டார். ஹுஸுர் அவர்கள் ஆம்! நான் அவ்வாறு வாதம் செய்துள்ளேன் என்று கூறினார்கள். அந்த நபர்களில் ஒருவர் சொன்னார். நாங்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய ஸலாத்தை உங்களுக்கு எட்ட வைத்திருக்கின்றேன். பிறகு என்னுடைய ஸலாத்தையும் எட்ட வைக்கின்றேன் என்று கூறிவிட்டு தங்களது கனவைக் கூறினார்.

அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை கனவில் வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது வலது தோளில் கை வைத்தவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹாதா மஸீஹ் – இவரே மஸீஹ். இவரிடம் பைஅத் செய்யுங்கள். எனது ஸலாத்தை அவரிடம் எட்ட வையுங்கள் என்றும் கூறினார்கள். அப்போது எனது உள்ளம் நடுங்கியது. அதாவது அந்த அறிவிப்பை அறிவிக்கின்றவர் கூறுகின்றார். இந்த அறிவிப்பை செய்கின்ற மிர்ஸா நிஸாமுத்தீன் சாஹிப் தொடர்ந்து கூறுகிறார். அவர் இவ்வாறு கூறியதும் அப்போது எனது உள்ளம் நடுங்கியது. நான் அழுதழுது மஸ்ஜித் அக்ஸாவில் துஆ செய்தேன். அல்லாஹ்வின் அருளால் நான் அல்லாஹ்வுக்கு அர்ப்பணம் ஆகின்றேன். அவன் விரைவாக எனது எஜமானரின் துஆவைக் கேட்டு இந்த எளிய, ஒன்றுமற்றவனாய் இருக்கின்ற இந்தப் பாவியை உயர்த்தினான். நான் அதற்குப் பிறகு கண்ட பல்வேறு கனவுகளை எழுத முடியாது. ஒரே ஒரு கனவை மட்டும் நான் கூறுகின்றேன். அதே இரவில் உயர்வான கனவுகள் வர ஆரம்பித்தன. எனக்கு பைஅத் எவ்வாறு கிடைத்தது என்பதை எழுத விரும்புகின்றேன். இதன் மூலமாகத்தான் இந்த எளியவனுக்கு பைஅத் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சம்பவத்தை மட்டும் நான் எழுதுகின்றேன்.

கூறுகின்றார்கள்: கனவில் நான் பார்த்தேன். ஒரு நதி கிழக்கிலிருந்து மேற்கின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. அதன் அகலம் ஒரு மைல் தூரம் இருந்தது. தண்ணீர் மிகவும் சுத்தமானதாக இருந்தது. அதாவது ஒருவர் கவிதையில் கூறினார். எவ்வாறு ஒருவரது பார்க்கும் பார்வை தெளிவாக இருக்குமோ, அல்லது எவ்வாறு சுத்தமான உள்ளம் இருக்குமோ அதுபோன்று அந்தத் தண்ணீரும் சுத்தமாக இருந்தது என்று கூறுகின்றார்கள். ஆக, அந்த தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. இறைவனைப் பற்றி நினைவில் இருக்கக்கூடிய ஒருவரைப் போன்று, தூய உள்ளம் உடையவரைப் போன்று அந்தத் தண்ணீரும் இருந்தது. அதாவது அதில் எவ்விதமான அபாயமும் இல்லை. நான் அந்த நீரில் மிகவும் ஆனந்தமாகக் குளிக்கின்றேன். மவ்லவி அப்துல்லாஹ் கஷ்மீரி என்பவர் அவர் அதுவரை அஹ்மதி ஆகாமல் இருந்தார். அவர் மிகத் தொலைவிலிருந்து உரத்த குரலில் முன்ஷி ஜீ பாபு ஜீ நீங்கள் குளித்துக் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டார்கள். உங்கள் இதயத்தைப் பாருங்கள். அது முற்றிலும் காய்ந்து இருக்கின்றது. அதில் தண்ணீரே படவில்லையே என்று கூறினார். அதாவது நான் குளித்துக் கொண்டிருந்த போது குரல் வந்தது. நான் தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்த போது கூட, நான் தண்ணீரில் மீண்டும் குதித்துப் பார்த்தேன். ஆனால் எனது இதயம் இருக்கக் கூடிய அந்தப் பகுதி தண்ணீர் படாமல் காய்ந்திருந்தது. நான் கையில் தண்ணீரை எடுத்து இதயத்தின் மீது போட்டேன். ஆனால் இதயம் அப்பொழுதும் காய்ந்திருந்தது. மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப்! என்ன விசயம்? என்று கேட்டேன். பிறகு என்னைக் கிழக்குப் பக்கம் பார்க்கும் படி அப்துல்லாஹ் கூறினார். நான் அங்கு பார்க்கும் போது ஒரு மிகப்பெரிய பாலம் இருந்தது. பாலத்திற்கு மேல் மிர்ஸா சாஹிப் வீடு இருந்தது. நான் அந்தப் பக்கம் செல்லமாட்டேன் என்று கூறினேன். மிர்ஸாவின் வீடு இருக்கிறது என்று கூறினேன். மவ்லவி அப்துல்லாஹ் கூறினார். சென்றுதான் பாருங்களேன் என்று கூறினார். அங்கு நான் செல்ல மாட்டேன் என்று கூறினேன். மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் அழுதவாறு கூறினார்கள். கண்டிப்பாக செல்ல வேண்டும் என்று சப்தமிட்டுக் கூறினார்கள். அதற்கு பிறகு நான் நீந்தியவாறு பாலத்தைக் கடந்து கிழக்குப் பக்கம் சென்றேன். அப்போது அங்கு புல் தரையாலான ஒரு தரை இருந்தது. அந்தத் தரையில் கஷ்டப்பட்டு ஏறி நின்றேன். எனது உடலிலிருந்த தண்ணீரை நான் பிழிய ஆரம்பித்தேன். அப்போது எனது இதயத்தில் நனையாத பகுதி, காய்ந்திருந்த பகுதியிலிருந்து நீரூற்று பெருக்கெடுத்தது போன்று ஓட ஆரம்பித்தது. அதனால் எனது உள்ளம் முழுவதும் ஆனந்தத்தால் நிரம்பி இருந்தது. அத்துடன் எனது கண்களும் திறந்தன. அதே நாளில் நான் பைஅத் செய்து விட்டேன்.

முஸ்தகீம் சாஹிபின் மகன் கைருத்தீன் சாஹிப் அவர்கள் 1906 –ல் பைஅத் செய்தார். அவர் தனது கனவைப் பற்றி கூறுகின்றார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஜுமுஆ தொழுகையை பெருநாள் தொழுகையைப் போன்று தொழ வைத்ததைப்பார்த்தார். குத்பா கொடுப்பதற்கு ஒரு அறை இருந்தது. தொழுவதற்காக அவர்கள் அறைக்குள் வந்தார்கள். திருக்குர்ஆனைப் பிடித்தவாறு அந்த அறைக்குள் நுழைந்தார்கள். அது பள்ளிவாசலின் வலது பக்கம் இருந்தது. அவர்களுக்குப் பின்னால் நான்கு சீக்கியர்கள் இருந்தனர். அவர்களுடைய ஆடைகள் அழுக்காக இருந்தன. அவர்களிடம் ஏதோ ஆயுதம் இருப்பது போன்றும் தெரிந்தது. அது வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால் வெளிப்படையாக தெரியவில்லை. அவர்கள் உள்ளே வந்தனர். அப்போது எனது உள்ளத்தில் தோன்றியது. இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை தாக்குவார்கள் என்று எண்ணினேன். ஆனால் அவர்கள் நாற்காலியில் அமர்ந்திருந்தார்கள். மேசையில் வைத்து

குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள். அந்த நான்கு சீக்கியர்களும் பக்கத்திலிருந்து குர்ஆன் ஓதுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு வெளியே வந்த போது நான்கு சீக்கியர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. கண்ணீரைத் துடைத்தவாறு வந்தார்கள். அப்போது அவர்களுக்கு உருக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரிந்தது. இவர்கள் மிர்ஸா சாஹிபின் முரீதுகளாக ஆகி விட்டனர். எனவே தான் அழுகின்றனர் என்று நான் கூறுகின்றேன். அதாவது உண்மையிலேயே அவர்கள் இவர்களை ஏற்றுக் கொண்டவர்களாக மாறி விட்டனர் என்று நான் கூறுகின்றேன்.

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் ரஹீம் சாஹிப் நய்யர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இவர் 1901 –ல் பைஅத் செய்தார். 1902 –ல் ஹுஸுர் அவர்களது எழுத்துக்களில் எனது நுபுவ்வத் எனது ரிஸாலத் என்ற சொற்களை நான் பார்த்தேன். அதாவது அவர் ஏதாவது ஒரு மேற்கோளை படித்திருக்கின்றார். அதில் மேரே நுபுவ்வத் – என்னுடைய நுபுவ்வத், மேரே ரிஸாலத் – என்னுடைய ரிஸாலத் என்று இருந்தது. இதைப் பார்த்ததும் எனது இயல்பில் ஒருவிதமான இறுக்கம் ஏற்பட்டது. இப்படியெல்லாம் ஏன் எழுதுகின்றார்கள் என்று நினைத்தேன். இரண்டு மூன்று நாட்களாக நான் எவரிடமும் பேசவில்லை. மூன்றாவது நாள் எனக்கு இல்ஹாம் மூலமாக கூறப்பட்டது. லா ரய்ஃப ஃபீஹி – இதில் எந்த சந்தேகமும் இல்லை என்று கூறப்பட்டது. அதன் பிறகு நான் ஓரிடத்திற்கு தொழில் செய்வதற்காக சென்றேன். பிறகு எனக்கு படிப்பதற்கான வாய்ப்பும் கிடைத்தது. இவர் அஹ்மதி ஆவதற்கு முன்பாக இந்த இல்ஹாம் கிடைத்தது. தொடர்பும் இருந்தது. அவர் கூறுகின்றார்: நான் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன். எனது அறிவும் வளர்ச்சியடைந்தது. அந்த நேரம் வந்தது. இறுதியில் அல்லாஹ் என்னை காதியான் கொண்டு வந்து சேர்த்தான்.

ஹஸ்ரத் மியான் அப்துர் ரஷீத் சாஹிப். இவர் 1897 –ல் பைஅத் செய்திருக்கிறார். அவர் கூறுகின்றார்கள். எனது தந்தையாருக்கு பைஅத் செய்யுமாறு ஒரு கனவில் தூண்டப்பட்டது. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் பார்த்தேன். ஹுஸுர் ஒரு கட்டிலில் அமர்ந்திருந்தார்கள். மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவர்களது பக்கத்தில் இருக்கின்றார்கள். ஒரு நோய்வாய்ப்பட்டவரை நலம் விசாரிப்பது போன்று நின்றார்கள். ஹுஸுர் (ஸல்) அவர்கள் கட்டிலிலிருந்து, அவர்களது தோளை ஆதரவாகப் பற்றி எழுந்து நின்று ஹுஸுர் (ஸல்) அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மையைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பிறகு ஒருமுறை நான் கனவில் பார்த்தேன். ஹுஸுர் (ஸல்) அவர்கள் ஆரோக்கியம் உள்ளவர்களாக ஆகி விட்டார்கள். அவர்களது முகம் பொலிவடைந்து விட்டது. இதற்கு நான் இவ்வாறு விளக்கம் எடுத்துக் கொண்டேன். இப்போது இஸ்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக மீண்டும் உயிர் பெறும். இந்தக் கனவிற்குப் பிறகு நான் பைஅத் செய்து விட்டேன்.

ஹஸ்ரத் ஸெய்யது ஜெய்னுல் ஆபிதீன் வலியுல்லாஹ் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இவர் 1903–ல் பைஅத் செய்தவர் உம்மே தாஹிரின் சகோதரர் ஆவார். எனக்கு 7, 8 வயது இருக்கும். அப்போது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. வீட்டில் இந்த விசயம் பேசப்பட்டு வந்தது. பாருங்கள் 7, 8 வயதுள்ள சிறுவறுக்குக் கூட அல்லாஹ் வழிகாட்டி இருக்கின்றான். மஹ்தி என்று ஒருவர் வாதம் செய்துள்ளார் என்று பேசப்பட்டது. அவர் இவ்வாறும் கூறி இருக்கின்றார். பஞ்சாபில் மலக்குகள் கருப்பு நிறச் செடிகளை நடுகின்றனர். அதற்கு பிளேக் நோய் என்றும் அது தனது வருகையின் அடையாளம் என்றும் கூறியதாக கூறப்பட்டது. அப்போது எனது தந்தையார் மருத்துவமனையில் இன்சார்ஜ் டாக்டராக இருந்தார். அதே காலத்தில் கனவில் நான் பார்த்தேன். ஒருவர் வந்து உமது தாய்வழிப் பாட்டனார் வருகின்றார் என்று தகவல் கொடுக்கின்றார். நான் அவர்களை வரவேற்பதற்காகச் சென்றேன். மருத்துவமனையின் வளாகத்தின் கிழக்குப் பக்கம் நான் பார்த்தேன். எங்களது தாத்தா மாட்டு வண்டியில் வந்து கொண்டிருந்தார். பச்சை நிறத் தலைப்பாகை அணிந்திருந்தார். நிறம் வெள்ளையாகவும் கோதுமை நிறம் கலந்ததாகவும் இருந்தது. தாடியும் வெண்மை நிறம் உடையதாக இருந்தது. நான் உங்களுக்கு குர்ஆன் கற்றுக் கொடுக்க வந்துள்ளேன் என்று கூறினார். அந்த நாட்களில் நான் இந்தக் கனவையும் பார்த்தேன். ஒரு பள்ளிவாசலின் கதவில் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. ஆனால் எனக்கு நினைவிருக்கும் வரை அந்த சொற்கள் மங்கலாகத் தெரிந்தன. காலத்தின் இமாம் வந்தார். பள்ளிவாசலில் நுழைகின்றார். இந்தக் காட்சியை நான் பார்த்தேன். லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் என்று எழுதப்பட்டிருந்தாலும் அது மங்கலாகத் தெரிகிறது.

பிறகு நான் காட்சியில் பார்த்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பள்ளிவாசலினுள் நுழைகின்றார்கள். நானும் அவர்களோடு நுழைகின்றேன். அப்போது பள்ளிவாசலில் ஸஃப்கள் கோணலாக இருக்கின்றன. அதை சரியாக்குகின்றார்கள். அந்தக் காலத்தில் நாங்கள் அஹ்மதியாகவில்லை. அந்தக் காலத்தில் இதுபற்றி பேசப்பட்டு வந்தது. முஸ்லிம்கள் அழிந்து விட்டனர் என்று கூறப்பட்டது. பதிமூன்றாவது நூற்றாண்டின் இறுதியாகும். இந்தக் காலத்தில் தான் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் வருவார்கள். அதற்குப் பிறகு ஈஸாவும் வருவார் என்று கூறப்பட்டது. அதாவது முஸ்லிம்களில் பொதுவாக இருந்து வரும் கருத்தாகும். ஈஸாவும் மஹ்தியும் இருவேறு நபர்கள் என்று அவர்கள் நம்புகின்றனர்.

கூறுகின்றார்: இது தொடர்பாக பேசப்பட்டு வந்தது. எனது தாயார் அந்த ஈஸா மஹ்தியின் வருகை தொடர்பாக மிகவும் மகிழ்ச்சியுடன் கூறி வந்தார்கள். அந்தக் காலம் மிகவும் அருகாமையில் இருக்கிறது என்றும் கூறினார். மேலும் கூறினார். அப்போது சூரிய, சந்திர கிரகணங்கள் ஏற்படும். இது மஹ்தியின் ஒரு அடையாளமாகவும், அவர்களது காலத்து அடையாளமாகவும் குறிப்பட்டுக் கூறப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்கள். அது நடந்து விட்டது; அந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது என்றும் கூறினார்கள். ஆக, சிறிய வயது உடையவருக்குக் கூட அல்லாஹ் இதுபோன்று வழிகாட்டியிருக்கின்றான். சூழ்நிலையின் தாக்கம் கனவில் வெளிப்படுவதும் சாத்தியம்தான். ஆனால், இந்தக் கனவுகள் பின்னர் நடைபெற இருக்கக் கூடிய இந்த சம்பவங்களைக் குறித்து சிறியவருக்கும் பெரியவருக்கும் அக்காலத்தில் அதிகமாக வந்தன. அவை இறைவன் புறமிருந்து கிடைத்த ஒரு தகவலாக இருந்தன. ஆக, இது விண்ணிலிருந்து கிடைத்த ஒரு தகவலாக இருந்தது. பிறகு டாக்டர் ஸெய்யது அப்துஸ் ஸத்தார் சாஹிப் அவர்களின் முழு குடும்பமும் ஜமாஅத்தில் இணைந்து, அவர்கள் மனத்தூய்மையில் முன்னேறினர்.

ஹஸ்ரத் காஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்: இவர் 1898 –ல் பைஅத் செய்தார். ஹுஸுர் (அலை) அவர்கள் என்னிடம் கூறினார்கள். நீங்கள் ஹாமித் அலியுடன் விருந்தகத்திற்குச் செல்லுங்கள். நான் ளுஹர் நேரத்தில் உங்களை சந்திப்பேன் என்றார்கள். நான் விருந்தினர் விடுதிக்குச் சென்றேன். அங்கு சாப்பிட்டேன். பின்பு ஓய்வெடுத்தேன். ளுஹர் பாங்கு கூறப்பட்டது. ஹாமித் அலி சாஹிப், நீங்கள் முதல் ஸஃப்பில் அமர வேண்டும் என்று கூறினார்கள். அவர்களது வழிகாட்டலுக்கு இணங்க தொழுகைக்கு முன்னதாகவே முதல் ஸஃப்பில் வந்து அமர்ந்திருந்தேன். ஹுஸுர் வந்ததும் தொழுதோம். தொழுகைக்குப் பிறகு ஹுஸுர் அவர்கள் என்னைப் பார்த்து நீங்கள் எப்போது போக விரும்புகின்றீர்கள் என்று கேட்டார்கள். ஹுஸுர்! ஒன்றிரண்டு நாட்களுக்கு தங்குவேன் என்றேன். ஹுஸுர் அவர்கள் குறைந்தபட்சம் மூன்று நாட்கள் தங்க வேண்டும் என்று கூறினார்கள். அடுத்த நாள் ளுஹர் நேரத்தில் நான் பைஅத்திற்காகக் கூறிய போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இப்போது வேண்டாம். குறைந்தபட்சம் சில நாட்கள் இங்கு தங்க வேண்டும். எங்களது நிலைமையைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். அதற்குப் பிறகு பைஅத் செய்யுங்கள் என்றார்கள். ஆனால் முதல் இரவிலேயே விருந்தகத்தில் வைத்து எனக்கு ஒரு வழிகாட்டல் கிடைத்தது. அதாவது பாருங்கள்! அஹ்மதி அல்லாதவர்கள் கூறுகின்றார்கள் அல்லது சிலரது எண்ணம் இவ்வாறு இருக்கின்றது. அதாவது புரியாமலேயே பலரும் பைஅத் செய்து விடுகின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் செய்ய விரும்புபவர்களிடம் எல்லாம் பைஅத் வாங்குகின்றார்கள் என்று கூறினார்கள். ஆனால் எதுவரை ஒருவருக்கு முழுமையான முறையில் திருப்தி ஏற்படவில்லையோ அதுவரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் வாங்குவதில்லை.

பிறகு கூறுகின்றார்: நான் கனவில் பார்த்தேன். விண்ணிலிருந்து ஓர் ஒளி இறங்கியது. அது எனது ஒரு காதில் நுழைந்து எனது உடலிலுள்ள எல்லா பாகங்கள் வழியாகவும் நுழைந்து பிறகு மற்றொரு காதின் வழியாக வெளியே சென்று மீண்டும் வானத்திற்குச் சென்று விட்டது. ஆக, சாதாரணமாக செல்லவில்லை. முழு உடலையும் சூழ்ந்து விட்டு, முழு உடலினுள்ளும் நுழைந்து விட்டு பிறகு வானத்திற்குச் சென்று விட்டது. பிறகு அதில் பல்வேறு விதமான நிறங்கள் தெரிய வந்தன. அதில் பச்சை நிறம் இருந்தது. சிவப்பு நிறம் இருந்தது. நீல நிறம் இருந்தது. எத்தனை நிறங்கள் என்றால் அதனை எண்ண முடியாது. அது வானவில் போன்றிருந்தது. அதன் மூலமாக முழு உலகமும் ஒளிமயமானது. அதில் எந்த அளவுக்கு ஆனந்தமும், மகிழ்ச்சியும் ஏற்பட்டதென்றால், அதனை நான் சொற்களால் கூற முடியாது. இந்தக் கனவின் பொருள், வானத்தின் அருளிலிருந்து எனக்கு பெரும் பங்கு கிடைக்கும். எனவே நான் பைஅத் செய்ய வேண்டும் என்று நான் இந்தக் கனவிற்கு பொருள் செய்தேன். பிறகு

அடுத்த நாள் ளுஹர் தொழுகையின் போது நான் பைஅத் செய்ய வேண்டும் என்று கூறினேன். ஹுஸுர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பிறகு மூன்றாவது முறையாக பைஅத் செய்வதாக கூறினேன். ஹுஸுர் எனக்கு நெஞ்சம் திறந்து விட்டது. அல்லாஹ்வுக்காக என்னிடம் பைஅத் வாங்குங்கள் என்று மூன்றாவது நாள் கூறினேன். பிறகு ஹுஸுர் அவர்கள் எனது கைகளைப் பற்றியவாறு என்னிடம் பைஅத் வாங்கினார்கள். அதற்குப் பிறகு நான் லாஹுர் திரும்பி வந்தேன்.

ஹஸ்ரத் முன்ஷி காஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இவரும் 1898 –ல் பைஅத் செய்தார். இவரது அறிவிப்பை தான் முதலில் சொன்னேன். லாஹுரில் ஒரு வக்கீல் இருந்தார். அவரது பெயர் கரீம் பக்ஷ் ஆகும். அவர் மிகவும் மோசமான ஏச்சுப் பேச்சுக்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாகக் கூறி வந்தார்கள். ஒருநாள் விவாதம் செய்யும் போது, மஸீஹ் இறந்து விட்டார் என்று யார்? கூறியது என்று கேட்டார். நான் அதை நிரூபிக்க முடியும் என்று கூறினேன். அவர் திடீரென்று என்னை அடிக்க ஆரம்பித்து விட்டார். இதன் காரணமாக நான் மயக்கமுற்று கீழே விழுந்தேன். அங்கிருந்து நான் திரும்பி வந்ததும், நான் அடுத்த நாள் இரவு கனவில் பார்த்தேன். ஓர் உடைந்த கட்டிலில் கரீம் பக்ஷ் படுத்துக் கொண்டிருந்தார். அந்தக் கட்டிலுக்குக் கீழே ஒரு குழி இருந்தது. அதில் அவர் விழுந்து விட்டார். சக்தியற்ற நிலையில் அவர் நிற்கின்றார். நான் காலையில் எழுந்து அவரிடம் சென்று கூறினேன். எனக்கு கனவில் கூறப்பட்டிருக்கிறது. நீ இழிவடைவாய் என்று கூறப்பட்டிருக்கிறது என்றேன். கொஞ்ச காலத்திற்குப் பிறகு விதவையாக இருந்த அவரது மகள் யாரிடமோ தகாத தொடர்பு கொண்டிருந்ததன் காரணமாக ஒரு குழந்தை உண்டானது. அந்தக் குழந்தை பிறப்பதற்கு முன்னரே அதை வயிற்றில் வைத்தே கொல்வதற்கு முயற்சி செய்யப்பட்டது. அதனால் தாயும் சேயும் இறந்தனர். போலீஸிற்கு தகவல் தெரிந்து விசாரணை நடந்தது. அதனை சரிக்கட்டுவதில் நிறைய பணம் செலவானது. கண்ணியத்தையும் இழந்தார். அதன் காரணமாக மிகவும் வெட்கமடைந்தார். பிறகு நான் அவரிடம், அவர் வீட்டிற்குச் சென்று சப்தமிட்டு அழைத்தேன். வெளியில் வந்த போது, நான் கூறினேன்: மிர்ஸா சாஹிபை எதிர்த்ததன் விளைவை நீ கண்டு கொண்டாய் என்றேன். அவர் மீண்டும் என்னை ஏசிப் பேசிவிட்டு வெட்கமடைந்து உள்ளே சென்றார். அதற்கு பிறகு அவரது முகத்தையே எனக்கு காட்டவில்லை. ஆக, இவ்வளவு நடந்த பிறகும் கூட அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இதுபோன்ற சம்பவங்கள் இன்றும் நடைபெறுகின்றன. பாகிஸ்தானிலும் அவ்வாறு நடந்துள்ளது. அவற்றை நான் எடுத்துக் கூறாததற்கு சில காரணங்கள் இருக்கின்றன. அஹ்மதிகளுக்கு எந்த விதமான கஷ்டங்களும் ஏற்படக் கூடாது என்பதற்காக நான் அவற்றைக் கூறவில்லை. பாகிஸ்தானின் நிலைமைகளிலும் கூட இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இழிவான சொற்களில் நினைவு கூறுபவர்களை அல்லாஹ் பழிவாங்குகின்றான். அல்லாஹ் எவ்வாறு அவர்களை இழிவடையச் செய்தான்? எவ்வாறு அவர்களைப் பிடித்தான்? என்ற சம்பவங்கள் இருக்கின்றன. காலம் வரும் போது அதை நான் எடுத்துச் சொல்வேன். ஆனால் அல்லாஹ்வின் அருளால் அந்தப் பகுதியிலுள்ள மக்களது ஈமான் இதன் காரணமாக வளர்ச்சி அடைகிறது.

ஹஸ்ரத் குலாம் ரஸுல் சாஹிப் ராஜ்கி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இவரும் 1897 –ல் பைஅத் செய்தார். மவ்லவி இமாமுத்தீன் சாஹிப் 1887 –ல் காதியான் சென்றிருந்தார். அவருக்கு எதிர்ப்பின் எண்ணங்கள் இருந்தது. ஆனால் பைஅத் செய்யவில்லை. மாறாக அவர் எதிர்ப்பில் முன்னேறி வந்தார். ஆனால் எனக்கு மீண்டும் மீண்டும் கனவு வந்தது. நான் பார்த்தேன். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் காதியான் வந்திருப்பதை நான் பார்த்தேன். அதன் காரணமாக மவ்லவி நிஸாமுத்தீன் சாஹிப் அவர்களுக்கு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. இருவரும் 1899 –ல் காதியான் சென்று பைஅத் செய்தோம். மவ்லவி சாஹிப் மாடிப்படிகள் ஏறிச் சென்றார். நான் பின்னால் சென்றேன். கண்ணியமிக்க பெரியவர்களை எதுவும் கொடுக்காமல் அவர்களை சந்திப்பது சரியில்லை என நினைத்தேன். ஒரு ரூபாய் எடுத்தேன். மவ்லவி சாஹிப், ஹஸ்ரத் சாஹிபை முதலில் சந்தித்தார். மவ்லவி சாஹிபிடம் ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள். உங்களது பின்னால் இருக்கக்கூடிய சிறுவரை அழையுங்கள் என்று கூறினார்கள். நான் அவர்களிடம் சென்றேன். ஹுஸுர் (அலை) அவர்களது அந்த மகிமைமிக்க தோற்றத்தைப் பார்த்து நான் அழ ஆரம்பித்து விட்டேன். அவர்கள் என்னைத் தடவிக் கொடுத்தார்கள். எனது முதுகில் அன்புடன் தடவிக் கொடுத்தார்கள். ஆனால் நானோ அழுது கொண்டேயிருந்தேன். ஏனென்றால் இவருக்கு ஏற்கனவே கனவு வந்திருந்தது. ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் காதியான் வந்திருப்பதாக இவர் கனவில் பார்த்திருக்கிறார். அதன் காரணமாக ஒரு உருக்கம் அவர்களிடத்தில் இருந்தது.

1905 –ல் பைஅத் செய்த சவுத்ரி அஹ்மது தீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ராவல்பிண்டியில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களைப் பார்ப்பதற்கு முன்பாக நான் ஒரு கனவில் பார்த்தேன். அதில் தாத்தா கன்ச் பக்ஷ் சாஹிப் உடைய கபர் இருக்கின்றது. அது ஹஸ்ரத் ரஸுூல் (ஸல்) அவர்களது கபர் போன்று தெரிகிறது. அதில் வெள்ளி நிறத் தட்டுகளும் இருக்கின்றன. ஒரு நபர் ஒரு பூமாலையை எடுத்து அந்தக் கபரில் இருக்கின்ற ஹஸ்ரத் ரஸுூல் (ஸல்) அவர்களுக்குக் கீழ் இருந்த அந்த மாலையை வைக்க முயற்சி செய்கின்றார். இறுதியில் வைத்தும் விட்டார். அதன் விளைவாக அதில் அடக்கம் செய்யப்பட்டிருந்தவர் ஒரு 12 வயது சிறுவராக வெளியே வந்தார். முதலில் அவர் என்னைத்தான் சந்தித்தார். அந்த சிறுவரது வடிவம் மிர்ஸா சாஹிப் வடிவம் போன்றிருந்தது. அப்போது ஹஸ்ரத் ரஸுூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனது வாக்குறுதிக்கு மாற்றமாக மீண்டும் எவ்வாறு உயிர் பெற்று வர முடியும் என்று நினைத்தேன். அப்போது இந்த எண்ணமும் வந்தது. மிர்ஸா சாஹிப் தன்னை ஹஸ்ரத் ரஸுூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பிரதி பிம்பமாக ஒருவராகத்தான் கூறுகின்றார். ஆக, இது அந்தக் கனவின் விளக்கம் தான் என்று எனக்கு புரிய வந்தது. இதன் மூலமாக தாக்கம் ஏற்பட்டு, மிர்ஸா சாஹிபின் உண்மைத் தன்மை புரிய வந்தது. அதன் மூலமாக நான் பைஅத் செய்தேன் என்று கூறுகின்றார்.

ஹஸ்ரத் மெஹர் குலாம் ஹுஸைன் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இவர் 1898 அல்லது 1899 –ல் பைஅத் செய்தவர். பைஅத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக சக்டாளவியாக இருந்தேன். அதன் முன் அஹ்லே ஹதீஸ் ஆக இருந்தேன். எங்களது முஹல்லாவில் ஓர் அஹ்மதி வந்தார். நாங்கள் அவரை பள்ளிவாசலில் தொழுவதிலிருந்தும் தண்ணீர் கொடுப்பதிலிருந்தும் கிணற்றில் தண்ணீர் எடுப்பதிலிருந்தும் தடுத்தோம். இஸ்லாத்தை விட்டு அவர் வெளியேறியவர் என்று கூறி வந்தோம். கனவில் பார்த்தேன். எங்களது கிணற்றுப் பக்கத்தில் அமெரிக்க பாதிரிகளின் ஒரு கோட்டை இருந்தது. நான் ஒரு மனிதரைப் பார்த்தேன். அவர் பட்டம் விட்டுக் கொண்டிருந்தார். இன்னொரு நபரைப் பார்த்தேன். இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது நான் பார்த்தேன். அந்தக் கோட்டையில் ஒரு சிம்மாசனம் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு அழகான சிறுவர் அமர்ந்திருந்தார். அந்த சிம்மாசனம் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. அந்த முதியவர் அந்தப் பட்டத்தை அந்த சிறுவனின் தலையின் மீது விட்டார். அந்தப் பட்டம் பட்டதுமே அந்த சிறுவனின் தலை கருப்பாக மாறியது. பின்பு புகையாக மாறியது. ஆனால் அந்தப் பட்டத்திற்கு எந்த விதமான இழப்பும் ஏற்படவில்லை. நான் மவ்லவி ஸெய்யுபத்தீன் சாஹிப் அவர்களிடம் வந்து இந்தக் கனவைக் கூறினேன். இது வெறும் கற்பனைதான் விட்டு விடுங்கள் என்று கூறினார்.

அடுத்த கனவைக் கூறுகின்றார். நான் கனவில் பார்த்தேன். நாங்கள் இரு சகோதரர்கள் பஜாருக்குச் செல்கின்றோம். அந்தக் கிராமம் முழுவதும் இந்துக்களின் கிராமமாக இருந்தது. அங்கு ஒரு முதியவர் குர்ஆன் படித்துக் கொண்டிருந்தார். நாம் திரும்பி வரும் போது, எனது உள்ளத்தில் நினைத்தேன். இந்த நபர் உறுதியான முஸ்லிமாக இருக்கின்றார். அச்சமற்றவர். இவர் இந்துக்களின் கிராமத்தில் சென்று குர்ஆனை ஓதுகின்றார். பைஅத் செய்த பிறகு ஹஸ்ரத் சாஹிபின் போட்டோ பார்த்த பிறகு இதற்கு முன்னர் கனவில் பட்டம் விட்ட அந்த முதியவரின் தோற்றமும், குர்ஆன் படித்த அந்த முதியவரின் தோற்றமும் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் தோற்றத்தை ஒத்திருந்தது.

ஹஸ்ரத் மெஹர் குலாம் ஹுஸைன் அறிவிக்கின்றார்கள்: இவர் 1898 –ல் பைஅத் செய்தவர். நான் ஒருமுறை காதியான் வந்தேன். ஹஸ்ரத் சாஹிப், ஸியால்கோட்டில் பிளேக் நோயின் நிலை என்ன? என்று கேட்டார்கள். அப்போது நான் ஒரு கனவைக் கூறினேன். நான் பார்த்தேன். எங்களது வீட்டில் போலீஸ்கள் துப்பாக்கிக் குண்டுகளோடு நிற்கின்றார்கள். துப்பாக்கி வைத்திருந்தனர். அதற்கு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் நீங்கள் இந்த பிளேக் நோயிலிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள். அல்லாஹ் உங்களை பாதுகாப்பான் என்று விளக்கம் கூறினார்கள்.

ஹஸ்ரத் சேக் அதா முஹம்மது சாஹிப். இவர் நிலத்தை அளக்கக் கூடியவராக இவர் இருந்தார். இவர், எனது மகன் அப்துல் ஹக் பிறந்த பிறகு நான் காதியான் வந்தேன். கனவில் மஸ்ஜித் முபாரக்கில் ஹஸ்ரத் சாஹிப் உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எனது பெயரை சிவப்பு நிற மையால் ஒரு புத்தகத்தில் எழுதினார்கள். கூறினார்கள்: பாபு பதஹ்தீன் சாஹிபிடம் கூறுங்கள். 13 டிசம்பரில் ஜல்ஸா நடக்காது என்று கூறினார்கள். அப்போது பள்ளிவாசல் அவ்வளவு விரிவாக இருக்கவில்லை. கனவில் பார்த்தேன். அப்போது 7 நிலத்தை

அளக்கக்கூடிய நபர்கள் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தார்கள். என்னைத் தான் ஹஸ்ரத் சாஹிப் அழைத்தார்கள். இதற்கு விளக்கம் கேட்ட போது ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள். இந்த 7 நிலத்தை அளக்கக்கூடிய நபர்களும் அஹ்மதியாகி விடுவர் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் ஹுஸைன் சாஹிப். 1898 –ல் பைஅத் செய்தவர். முன்ஷி குலாமுத்தீன் சாஹிப் மூலம் நாங்கள் நூல்களைப் படித்து வந்தோம். நாங்கள் ஷியாக்களாக இருந்தாம். மிராத்துல் ஆஸிகீன் போன்ற பாடல்களைப் பாடி வந்தோம். சில நேரங்களில் பக்கீர்மார்கள் பிறகு இமாம் கஸ்ஸாலி அவர்களது சிராஜுஸ் ஸாலிகீன் போன்ற நூல்களைப் படித்து வந்தோம். அந்த நூலைப் படித்த பிறகு இப்படிப்பட்ட ஒரு நபர் இன்று நமக்கு கிடைத்தால் 100, 200 மைல்களுக்கு அப்பால் சென்று அவரை சந்திக்க வேண்டிய வந்தாலும் சந்திப்போம் என்று கூறினேன். தற்செயலாக காதியானிலிருந்து தவ்ஸீஹே மராம், ஃபத்ஹே இஸ்லாம் போன்ற நூல்கள் கிடைத்தன. பாபா குத்புத்தீன் மலியர் கோட்லாவிலிருந்து இதைக் கொண்டு வந்தார். அவருக்கும் கனவு வந்திருந்தது. ஸியால்கோட் செல்வதாகவும், ஹஸ்ரத் சாஹிபை சந்திப்பதாகவும் கனவு வந்தது. அவர் நிஜமாகவே செல்வதற்கு முடிவெடுத்தார். கனவில் ஹுஸூரை அவர் பார்த்தது போன்று பார்த்தார். அந்த நூல்களையும் எடுத்துச் சென்றிருந்தார். குலாமுத்தீன் சாஹிபை சந்தித்தார். நூல்களைப் படித்து விட்டு கூறினார். நான் எனது மகளிடம் செல்ல வேண்டும். நீங்கள் இரண்டு நாட்களுக்குள் இந்த நூல்களைப் படித்து விட்டுக் கொடுங்கள் என்று கூறினார். ஏனென்றால் நான் பயணத்தில் செல்ல வேண்டியதிருக்கிறது என்று கூறினார். முன்ஷி சாஹிப் அந்த நூல்களைப் படித்துக் காட்டினார். சேக் கத்தார், இமாம் கஸ்ஸாலி ஆகியோரை விட இந்த எழுத்துக்கள் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை என்று கூறினார்கள். அதை விட உயர்வான எழுத்துக்கள் என்று கூறினார்கள். அப்போது பைஅத் பற்றிய பிரசுரத்தை ஹஸ்ரத் சாஹிப் வெளியிட்டிருந்தார்கள். நானும் முன்ஷி குலாமுத்தீன் சாஹிப், மவ்லவி அதா முஹம்மது சாஹிப் ஆகியோர் பைஅத் செய்தோம். இது 1891 –ல் நடந்ததாகும். அவர் அந்த பத்திரிகையை படித்துக் காட்டிய பிறகு எங்களது இந்த மாதிரியான ஒரு நபர் கிடைத்தால், 400 மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் நாங்கள் அங்கு செல்வோம் என்று வாக்களித்திருந்தோம். நாங்கள் பைஅத் செய்து விட்டோம். 1892 ஆம் ஆண்டு ஜல்ஸா ஸாலானா வரவிருக்கிறது. பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கிறது. நாம் ஜல்ஸா பார்க்கச் செல்வோம் என்று கூறினேன். மூன்று பேரும் சொல்வோம். நாளை மறுநாள் செல்வோம் என முடிவெடுக்கப்பட்டது. ஆனால் நாங்கள் வருவதற்கு முன்னரே அந்த மக்கள் சென்று விட்டனர். அதாவது கர்யாலாவாலா என்ற ஒரு ஸ்டேசனில் அவர்கள் சென்று சந்தித்து அங்கிருந்து செல்வதாக திட்டமிட்டிருந்தோம்.

அறிவிப்பவர் கூறுகின்றார்: கர்யாலாவில் நாங்கள் மூவரும் ஒன்றாக சென்றோம். மறுநாள் லாஹூர் அடைந்தோம். ஓரிடத்தில் ரொட்டி சாப்பிட்டோம். மக்கள் கூறினர். 6.00 மணிக்கு இரயில் உள்ளது என்று கூறினார்கள். அதற்குப் பிறகு நாங்கள் மிருகக்காட்சி சாலை சென்று பார்த்தோம். இரவு 11.30 மணிக்கு பட்டாலா வந்து சேர்ந்தோம். ஒரு தங்கும் விடுதியில் தங்கினோம். அங்கு எந்தக் கட்டிலும் இல்லாமல் இருந்தது. அசுத்தமாக இருந்தது. அங்கிருக்க மனம் இல்லை. நகரிலுள்ள ஒரு பள்ளிவாசலுக்குச் சென்றோம். பள்ளிவாசலில் தங்கினோம். இறைவனது வல்லமையைப் பாருங்கள். அந்தப் பள்ளிவாசல் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி தொழ வைக்கக்கூடிய பள்ளிவாசலாக இருந்தது. சுபுஹ் தொழுகைக்குப் பிறகு மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அவர்கள் கூறினார். நீங்கள் அதாவது இந்த விருந்தினர்கள் எங்கிருந்து வந்திருக்கின்றார்கள் என்று கேட்டார். குலாமுத்தீன் சாஹிபிடம் நாங்கள் கூறினோம். நீங்கள் நன்கு கல்வி கற்றவர். நீங்கள் அவரிடம் பேசுங்கள் என்றோம். நாங்கள் ருஹ்தாஸ் ஜிஹ்லம் ஜில்லாவிலிருந்து வந்திருக்கின்றோம் என்று கூறினோம். மவ்லவி சாஹிப் எங்களை விருந்தாளி என்று கருதி, ரஸ்க் சாப்பிடத் தந்தார். நீங்கள் எங்கே போகின்றீர்கள் என்று அவர் கேட்டார். முன்ஷி சாஹிப் நாங்கள் காதியான் செல்கின்றோம் என்று கூறினார். அங்கு என்ன பணி? என்று கேட்டார். முன்ஷி சாஹிப், மிர்ஸா சாஹிப் அவர்கள் வாதம் செய்துள்ளார்; ஜல்ஸா பற்றியும் அறிவித்திருக்கின்றார் என்று கூறினார். ஒரு விசயம் சொல்லாமல் விட்டு விட்டேன் என்று அவர் கூறுகின்றார். முன்ஷி சாஹிப் இந்தப் பத்திரிகை, நூல்களைப் படித்துக் காட்டிய பிறகு மஸீஹ் இறந்து விட்டார். நானே இப்போதைய மஸீஹ் என்று சாதாரணமாக ஒருவரால் கூற முடியாது. அவ்வாறு கூறுபவர் சாதாரண மனிதராக இருக்க முடியாது என்று அல்லா தத்தா சாஹிப் கூறினார்கள். 13 நூற்றாண்டுகளாக இருந்து வருகிற ஒரு தவறை சுட்டிக் காட்டியுள்ளார்கள் என்று அல்லா தத்தா சாஹிப் கூறியவுடன், மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி கூறினார். மிர்ஸா நல்லவராக இருந்தால் நான் அவரை ஏற்றுக் கொண்டிருப்பேனே! நான் அவரிடம் பைஅத் செய்திருப்பேனே! நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். உங்களது அறிவு கெட்டு விட்டதா? என்றார். மிர்ஸா சாஹிபை எனக்கு நல்ல தெரியும். அவர் புதிய

கடை திறந்திருக்கின்றார். எனவே நீங்கள் விட்டு விடுங்கள். வீணாக பைசாவை வீணாக்காதீர்கள் என்றும் கூறினார். எனது நண்பர்கள் அமைதியாக இருந்து விட்டனர். நான் கூறினேன். நாங்கள் ஏற்கனவே செலவழிக்க வேண்டியதை செலவழித்து விட்டோம். இப்போது கண்டிப்பாக நாங்கள் காதியான் செல்வோம். அதற்குப் பிறகு அவர் எங்களுக்கு சாப்பிடுதவற்கு ரொட்டி கொடுத்தார். அதை சாப்பிட்டு விட்டு நாங்கள் காதியான் சென்றோம். 25, 30 நபர்கள் தான் இருந்தார்கள். மாநாடு நடந்தது. சில ஸஃப்கள் தான் தொழுகைக்காக மக்கள் நின்றார்கள். டாக்டர் அப்துல் ஹக்கீம் சாஹிப் அவர்கள் எங்களுக்கு படுப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்தார்கள். இரவு கழிந்தது. காலை பத்து மணிக்கு ஜல்ஸாவில் கலந்து கொண்டோம். ஹஸ்ரத் சாஹிப் வந்தார்கள். ஹுஸுர் ரோமி தொப்பி ஒன்று வைத்திருந்தார்கள். அது தலைப்பாகை வழியாகத் தெரிந்தது. ஹுஸுர் அவர்களது முகத்தைப் பார்த்தேன். பார்த்த உடன், மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் சொற்களை கேட்டிருந்தால் நான் ஒருபோதும் இதுபோன்ற முகத்தைப் பார்த்திருக்கவே முடியாது. அந்த பாக்கியம் நமக்கு கிடைக்காமல் போயிருக்கும் என்று கூறினேன்.

ஹகீம் அப்துல் ஸமத் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த விபரத்தைக் கூறுகிறார்கள்: 1905 –ல் இவர் பைஅத் செய்தார்.

ஹுஸுர் கூறினார்கள்: அல்லாஹ் என்னை மஸீஹ் மவ்வூது ஆக அனுப்பியிருக்கின்றான். யார் என்னைப் பற்றி சரியான முடிவுக்கு வர முடிவதில்லையோ அவர் அதிகமாக ஐந்து வேளை தொழுகையில் ஓதப்படுகின்ற துஆவை அதாவது, இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம் என்ற துஆவை ஓத வேண்டும். போகும் போதும், வரும் போதும், உட்காரும் போதும், எழும்போதும் குறைந்தபட்சம் 40 நாட்களுக்கு இந்த துஆவை ஓதி வர வேண்டும். நான் அப்போதே அந்த துஆவை ஓத ஆரம்பித்தேன். ஒரு வாரம் கடந்திருக்கும். நான் பார்த்தேன். முஹல்லாவின் பள்ளிவாசலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்திருக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் சாஹிபை சந்திப்பதற்காக கையை நீட்டுகின்றேன். ஒரு கண் தெரியாத மவ்லவி என்னை தடுத்தார். மறுபக்கம் சென்று சந்திக்க ஆரம்பித்தேன். அங்கும் அவர் தடுத்தார். மூன்றாவது முறையாக முஸாபா செய்ய விரும்பினேன். அப்போதும் அவர் தடுத்தார். அப்போது எனக்கு கோபம் ஏற்பட்டது. நான் அவரை அடிக்க கையை ஓங்கினேன். ஹஸ்ரத் சாஹிப், நீங்கள் அவ்வாறு செய்யாதீர்கள்; அடிக்காதீர்கள் என்று கூறினார்கள். ஹுஸுர்! நான் ஹுஸுரிடம் முஸாபா செய்ய விரும்புகிறேன். இந்த மனிதர் என்னை தடுக்கின்றார் என்று கூறினேன். இந்தக் கனவு கண்ட பிறகு நான் கண் விழித்தேன். மீர் காஸீம் சாஹிப், மவ்லவி மஹ்பூப் ஆலம் சாஹிப், மிஸ்திரி காதர் பக்ஷ் சாஹிப் ஆகியோரிடம் இந்தக் கனவைக் கூறினேன். மீர் சாஹிப் கூறினார்கள். இதை எழுதுங்கள் என்றார்கள். இந்தக் கனவை ஹுஸுர் அவர்களிடம் பைஅத் செய்வதற்கான ஒரு காரணமாக ஆக்கிக் கொள்வேன் என்று ஹுஸுர் அவர்களிடம் அதன் கீழ் எழுதுமாறு கூறினார். உங்கள் உறவினர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் இனி ஒரு நொடிப் பொழுது கூட உங்களது உறவினர்கள் உங்களை வீட்டில் வைக்கமாட்டார்கள் என்று கூறினார். மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கு எழுதினார்கள். உங்களது பைஅத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் ஏச்சுப் பேச்சுக்களின் பெரிய மலையே உங்களுக்கு வந்தால் கூட அவற்றை நீங்கள் ஏறெடுத்துப் பார்க்க வேண்டாம் என்று கூறினார்கள்.

அல்லாஹ் இந்தப் பெரியவர்களின் சந்ததியினரிடம் கூட அவர்கள் பற்றுடன் ஜமாஅத்தோடு இணைந்திருக்கக் கூடிய தவ்ஃபீகை வழங்குவானாக! இந்த சம்பவம் அவருக்கு நல்ல பாடத்தை வழங்கட்டும்! ஈமானிலும் நிச்சய உறுதியிலும் அவர்கள் முன்னேறட்டும்! இன்றைய நாட்களில் காதியானில் ஜல்ஸாவிற்கான தயாரிப்பு நடந்து வருகிறது. இன்ஷா அல்லாஹ் நாளையிலிருந்து மாநாடு ஆரம்பமாகி விடும். அல்லாஹ் எல்லா வகையிலும் ஜல்ஸாவை அருளுக்குரியதாக்குவானாக! யாரெல்லாம் இதில் கலந்து கொள்கின்றார்களோ, அவர்கள் அதிலிருந்து முழுமையான நற்பலனைப் பெற வேண்டும். அவர்களுக்கும் நான் கூறுகின்றேன். இப்போது ஏறக்குறைய 21, 22 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்துள்ளனர். அவர்கள் எந்த நோக்கத்திற்காக சென்றுள்ளார்களோ அதனை அவர்கள் நிறைவேற்ற வேண்டும். துஆவில் நேரத்தைக் கழிக்க வேண்டும். அந்தப் புனித இடங்களில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ செய்த புனித இடங்களில் சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்களும் துஆ செய்ய வேண்டும். ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக எல்லாவற்றையும் விட அதிகமாக துஆசெய்ய வேண்டும். எதிரிகளின் தீங்கிலிருந்து இரட்சிப்பினைப் பெறுவதற்காக குறிப்பாக துஆ செய்ய வேண்டும். இந்த துஆக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். எல்லாவற்றையும் விட மிகவும்

முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவ்வாறே முஸ்லிம் உம்மத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் நேரான வழியில் நடத்துவானாக! அவர்களுக்கு வழிகாட்டுவானாக! அவர்களுக்கும் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக!

இவ்வாறே இன்றைய நாட்களில் முஸ்லிம் நாடுகளின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் குறிப்பாக அதிலும் சிரியாவில் அங்குள்ள அஹ்மதிகள் எழுதுகின்றார்கள். நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. அதை வெளியில் உள்ளவர்களால் கணித்துக்கூட பார்க்க முடியாது. எனவே குறிப்பாக இந்த நாடுகளுக்காக துஆ செய்யுங்கள். ஒட்டுமொத்தமாக எல்லாருக்காகவும், குறிப்பாக அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா வகையிலும் எல்லா தீங்கிலிருந்தும் எல்லா துன்பங்களிலிருந்து அவர்களை பாதுகாப்பானாக! அல்லாஹ் அரசாங்கத்திலுள்ள உயர் அதிகாரிகளுக்கும் அறிவை வழங்குவானாக! பொதுமக்களுக்கும் அறிவை வழங்குவானாக! அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். சண்டையிடாமல் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். சமாதானம் நிலவ வேண்டும். இதன் காரணமாக தீவிரவாதத்தை விரும்புகின்றவர்களும் இஸ்லாத்தின் எதிரிகளும் ஆகிய இருவரும் பயன் பெற முயற்சி செய்கின்றனர். நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டே செல்கிறது. அல்லாஹ் இந்த இரு பிரிவினரையும் அழித்து விடுவானாக! அதன் மூலமாக இஸ்லாத்தை இவர்கள் கறை படிந்ததாக ஆக்கக்கூடிய இவர்களது முயற்சிகள் தோல்வி அடையட்டும்! அல்லது இஸ்லாத்தின் பெயரால் அல்லது இஸ்லாத்தின் மீது அனுதாபம் கொண்ட நிலையில் இவர்கள் செய்கின்ற தவறான முயற்சிகளில் இவர்களுக்கு தோல்வி கிடைக்க வேண்டும். ஜமாஅத்தே அஹ்மதிய்யா உலகிற்கு எடுத்துக்காட்டுகின்ற இஸ்லாத்தின் அழகிய முகம் மக்களுக்கு தென்பட வேண்டும். அல்லாஹ் நமது எண்ணத்திலும் நமது முயற்சியிலும் பரக்கத்தை வழங்குவானாக! முழு உலகத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின் கீழ் கொண்டு வருவானாக!

எனவே மாநாட்டு நாட்களில் குறிப்பாக அங்குள்ள மக்கள் இந்த துஆக்களை செய்து வர வேண்டும். இதை கண் முன் நிறுத்தி செயல்பட வேண்டும். தொழுகைக்குப் பிறகு நான் மூன்று ஜானாஸாக்களை தொழு வைக்க உள்ளேன். முதலாவது ஜனாஸா புரொஃபொஸர் பஷீர் அஹ்மது சவுத்ரி சாஹிப். சவுத்ரி சிராஜ் சாஹிப் லாஹூர் உடைய மகன் ஆவார். 2, நவம்பரிலிருந்து சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு தமது 68வது வயதில் வஃபாத் ஆகியுள்ளார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 28 மே 2010 ஆம் ஆண்டு தாருஸ் ஸிக்ர் லாஹூரில் நடந்த சம்பவத்தில் பல குண்டுகள் இவர் மீது பட்டன. படுகாயமுற்றார். இவர்களது வலது கால் முற்றிலும் பாதிக்கப்பட்டு விட்டது. ஒன்றரை வருடம் தொடர்ச்சியாக இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மிகவும் துன்பத்திலும் இருந்து வந்தார். நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்தும் கூட மிகவும் பொறுமையுடன் தைரியத்துடன் இவர் நாட்களைக் கழித்து வந்தார். ஆனால் முறையீடு செய்யக்கூடிய எந்த சொற்களும் இவரது நாவில் வரவில்லை. ஆனால் அதற்குப் பிறகு அவரால் நடப்பதற்கு முடிந்தது. எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் விதி மிகைத்து விட்டது. இவர் தொழுகையை முறையாகப் பேணி வந்தார். திருக்குர்ஆன் மீது ஆழ்ந்த பற்றுடையவராக இருந்தார். மிகவும் தாழ்மை குணம் உள்ளவராக இருந்தார். ஜமாஅத் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு வந்தார். கிலாஃபத்துடன் நல்ல பற்றுள்ளவர். ஆங்கிலத்திலும் பொருளியலிலும் எம்.ஏ. படித்திருந்தார். பஞ்சாப் யுனிவர்சிட்டியில் ஆங்கில ஆசிரியராகவும் அந்தத் துறையின் அட்வைஸராகவும் அவர் இருந்து வந்தார். இதே கல்லூரியில் பள்ளியில் கற்றுத்தரக்கூடிய நூல்களின் கட்டுரை ஆசிரியராகவும் இவர் இருந்திருக்கின்றார். ஆங்கிலக் கவிஞராகத் திகழ்ந்தார். குல்பர்க்கில் அவரது வீடு 20 வருடங்களாக தொழுகையின் சென்டராக இருந்தது. எல்லா பொருளாதாரத் திட்டங்களிலும் இவர் கலந்து கொண்டார். மனைவியுடன் ஐந்து மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர்.

இரண்டாவது ஜனாஸா பாபர் அலி சாஹிப். 27 டிசம்பர் 2012 அன்று இவர் விபத்துக்குள்ளாகி வஃபாத் ஆகி இருக்கின்றார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இதுவும் ஒருவயையில் சஹாதத் ஆகும். சப் இன்சார்ஜ் சேக் அப்துல் காதிர் சாஹிப் அவர்களுடன் ஒரு சுற்றுப்பயணத்தில் இவர் சென்றார். ஜமாஅத் பணி நடந்து கொண்டிருக்கும் போது இந்த விபத்து நடந்திருக்கின்றது. சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 7.00 மணிக்கு திரும்பி வந்த போது குறுகிய சாலையில் பனிப்பொழிவு காரணமாக இவரது டிரக் மீது மோட்டார் சைக்கிள் மோதியது. விபத்தின் காரணமாக இவரும் சேக் அப்துல் காதிர் சாஹிப் அவர்களும் கடுமையான காயம் இவருக்கு

ஏற்பட்டது. குடியிருப்பு இல்லாத பகுதியில் நடந்த விபத்தாகும். மக்கள் போலீஸிற்கு தகவல் கொடுத்தனர். சிறிது நேரம் கழிந்த பிறகு தான் போலீஸிற்கு தகவல் கொடுக்க முடிந்தது. ஆனால் காயத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் முஅல்லிம் பாபர் அலி சாஹிப் அவர்கள் அங்கேயே வஃபாத் ஆனார்கள். நல்ல இயல்பு கொண்டவர்; உழைக்கக் கூடியவர்; கட்டுப்படுபவர்; வாழ்வை அர்ப்பணித்தவர். இவரது வாழ்க்கையை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்திருந்தார். M.T.A. உடைய புதிய டிஸ்களைப் பொருத்துவதில் இவர் ஆர்வம் உடையவராக இருந்து வந்தார். இவரது சிறிய வயதிலேயே தந்தையார் வஃபாத் ஆகி விட்டார்கள். முதிய வயதுடைய தாயார் உள்ளார். அல்லாஹ் அவருக்கு பொறுமையை வழங்குவானாக! பெஹஸ்தி மக்பரா காதியானில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இவர் வஸிய்யத் செய்தவர் ஆவார். அப்துல் காதிர் சாஹிப் காயமுற்றுள்ளார். சிகிச்சை நடைபெறுகிறது. விரைவில் நலம் பெற துஆ செய்யுங்கள்.

மூன்றாவது ஜனாஸா ருபினா நுஸ்ரத் ஜஹான் சாஹிபா உடையதாகும். மிர்ஸா ஸஃபர் அஹ்மது சாஹிப் சஹீது லாஹூரி அவர்களது மனைவி ஆவார். 3 டிசம்பர் அன்று இவர் வஃபாத் ஆகி இருக்கின்றார். இரண்டு வருடங்களாக இவர் கேன்ஸர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். தற்போது வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 28 மே 2010 தாருல் ஸிக்ரில் வைத்து இவரது கணவர் சஹீதான போது இவர் மிகவும் பொறுமையுடனும் தைரியத்துடனும் இந்த துக்கத்தை சகித்துக் கொண்டார். அவரது மையத் கொண்டு வரப்பட்ட போது கூட அவரது நாவில் சஹாதத்திற்காக யாரும் அழக்கூடாது என்ற சொற்களே இருந்தன. அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி அடைய வேண்டும் என்ற சொற்களையே கூறி வந்தார். கண்களிலிருந்து கண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால் முழுமையான தைரியத்துடன் செயல்படக் கூடியவர்களாக அவர் இருந்தார். தனது தந்தையாருடன் இவர் சிராலியோனில் இவர் இருந்து வந்தார். திருமணத்திற்குப் பிறகு 1988 -ல் ஜப்பான் சென்றார். அங்கு டோக்கியாவின் லஜ்னா சதர் மற்றும் இஸ்லாஹ்-வ-இர்சாத் செயலராகவும் இருந்து வந்தார். பல தப்லீக் நிகழச்சிகளில் பங்குபெற்றுள்ளார். இவர் பொருளாதாரத் திட்டங்களில் பங்குபெறுபவர். தமது நகைகளை ஜமாஅத்திற்கு வழங்கி வந்தார். ஜப்பானிலிருந்து 2004 ஆம் ஆண்டு திரும்பி வந்தார். பாகிஸ்தானில் நீண்ட காலமாக லஜ்னாவில் தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. தஹ்ரீகே ஜதீதின் நாயிப் செயலராக இருந்தார். கிலாஃபத்துடன் ஆழ்ந்த பற்று இருந்தது. குத்பாக்களை M.T.A. -ல் பார்த்து பாயிண்டுகளை குறிப்பு எடுத்துக் கொள்வார். பிறகு பல்வேறு சந்தர்ப்பங்களில் அதை எடுத்துச் சொல்வார். இவ்வளவு நீண்ட கால துன்பத்தையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டார். முறையீடு தொடர்பான எந்த சொற்களும் அவரது நாவில் வரவில்லை. எந்தவொரு சிறிய அன்பளிப்பு கிடைத்தாலும் ரொக்கப் பணமாக கிடைக்கக் கூடிய அன்பளிப்புகளில் இருந்து உடனடியாக சந்தாவை கொடுத்து விடுவார். இவரது சிறிய சகோதரர் அங்குள்ள செகரட்டரி மால் ஆக இருந்தார். அவர் ஒரு மாதத்தில் முழுவதும் ஒருமுறை சந்தா செலுத்தி வாருங்கள். மொத்தமாக செலுத்துங்கள் என்று அவர் கூறியதற்கு, இல்லை! எப்போதெல்லாம் எனக்கு பணம் கிடைக்கின்றதோ உடனடியாக சந்தா கொடுத்து விடுவேன். ஏனென்றால் அல்லாஹ்வின் விசயத்தில் நான் எந்த விதமான காலதாமதத்தையும் விரும்பவில்லை என்று கூறி வந்தார். 2011 ஜல்ஸாவுக்கு இங்கு வந்திருந்தார். நோயிற்குப் பிறகு தான் வந்தார். எனினும் தைரியமாக இருந்தார். அல்லாஹ் இவருடைய தர்ஜாவை உயர்த்துவானாக! இவருக்கு எந்த சந்ததியும் இல்லை.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **28.12.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456